# மாகாணக்கல்வித் திணைக்களம்
## வட மாகாணம்
### மாகாணமட்ட இரண்டாந் தவணைப்பரீட்சை – 2016
*வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்*

தரம் - 11 நேரம் :- 1.00 மணி

சுட்டெண் :........................................... புள்ளி :-

பகுதி I

- ***எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.***
- ***1 – 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), என இலக்கம் இடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.***
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
  - ***பின்வரும் விடய ஆய்விலிருந்து வினா இலக்கம் 1 இலிருந்து 4 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.***

வணிக்கப்பட்டதாரியான அருன் என்பவர் தனது வேலையில்லாப் பிரச்சனையை கருத்திற்கொண்டு "விரைவு உணவகம்" ஒன்றினை நடாத்துகின்றார். இவர் உள்ளூரில் உள்ள உணவு உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்து அவற்றை நுகர்வோருக்கும் அருகில் உள்ள அரச திணைக்களம் ஒன்றிற்கும் விநியோகித்து வருகின்றார்.

1) அருணனின் உணவகத்தினால் நிறைவேற்றப்படும் மனித தேவையானது.
 1. உணவு 2. இடியப்பம் 3. இட்லி 4. வடை, ரீ

2) இவ்விடய ஆய்வில் இருந்து அருன் உணவகமானது.
 1. பொருள் உற்பத்தி வணிகம் ஒன்றாகும்.
 2. சேவை வழங்கும் வணிகம் ஒன்றாகும்.
 3. இலாப நோக்கற்ற வணிகம் ஒன்றாகும்.
 4. பங்குடமை வணிகம் ஒன்றாகும்.

3) அருன் உணவகத்தின் பலம் ஒன்றாக இருப்பது
 1. உணவுத் தேவையைப் பூர்த்தி செய்தல்
 2. அருன் வணிகப் பட்டதாரியாக இருத்தல்.
 3. அரச திணைக்களத்துக்கு அருகில் காணப்படுதல்
 4. மேற்கூறிய அனைத்தும்

4) அருன் தனது வணிகத்தை தனியாள் உடைமை வணிகமாக ஆரம்பிப்பதற்கு காரணம் அல்லாதது?
 1. இலாபம் முழுவதையும் உரிமையாளர் ஒருவரே அனுபவித்தல்
 2. இலகுவாக ஆரம்பிக்கக் கூடியதாக இருத்தல்
 3. குறைந்த மூலதனத்துடன் ஆரம்பித்தல்
 4. நீடித்த ஆயுளை உடையது.



kalvi.lk

5) நோக்கத்தின் அடிப்படையில் வணிக அமைப்புக்கள் சரியாக வகைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.

1. இலாப நோக்கமற்ற வணிகம், இலாப நோக்குடைய வணிகம்
2. பேரளவு வணிகம்,சிற்றளவு வணிகம்
3. அரச வணிகம், கூட்டுறவு வணிகம்
4. தனியார்துறை வணிகம், அரசதுறை வணிகம்

6) அமலாவும், விமலாவும் கட்டிடப் பொருள் விற்பனை செய்யும் நோக்கில் ஒப்பந்தம் ஒன்றினை ஏற்படுத்தி அதன்மூலம் வணிகத்தை நடாத்திச் செல்ல எண்ணுகின்றனர். இதற்கு மிகவும் பொருத்தமான வணிக அமையாக இருப்பது

1. தனியார் உரிமை வணிகம்
2. கூட்டிணைக்கப்பட்ட கம்பனி
3. பங்குடமை வணிகம்
4. சங்க வகையான அமைப்பு

7) பிரியதாசன் என்பவர் "தாசன" எனும் பெயரில் வணிகமொன்றினை நடாத்திச் செல்கின்றார். இவ் வணிகத்தை பதிவுசெய்வது தொடர்பான சரியான கூற்றினைத் தெரிவுசெய்க.

1. இவ் வணிகத்தைப் பதிவு செய்வதனால் சட்டரீதியான தனிமனித அந்தஸ்துக் கிடைக்கின்றது.
2. இவ் வணிகத்தின் பெயரைக் கட்டாயமாக பதிவு செய்தல் வேண்டும்.
3. இவ் வணிகத்தின் பெயரைக் கட்டாயமாகப் பதிவுசெய்ய வேண்டியதில்லை
4. இவ்வணிகத்தினை கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்தல் வேண்டும்.

Education கல்வி அධ්‍යාපන

8) காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு எதிர்பார்க்கும் முதலீட்டாளர் ஒருவர் ……………………….. ஆரம்பிக்க வேண்டும்.

மேற்குறித்த இடைவெளிக்குரிய சரியான விடையினைத் தெரிவுசெய்க.

1. மக்கள் வங்கியில் சேமிப்பு வைப்புக் கணக்கொன்றினை
2. தேசிய சேமிப்பு வங்கியில் நடைமுறைக் கணக்கொன்றினை
3. இலங்கை வங்கியில் நடைமுறைக் கணக்கொன்றினை
4. தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்பு வைப்புக் கணக்கொன்றினை.

9) காசோலை ஒன்றுடன் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளும் போது தொடர்புடைய பிரிவினர் அடங்கும் தொகுதி

1. காசோலை வரைபவர்,கட்டளையை பெறுபவர், பணம் பெறுபவர்
2. கொடுணி, பணம் பெறுபவர்,கட்டளை இடுபவர்
3. கணக்கு வைத்திருப்போன், வரைவோன், வங்கி
4. இலங்கை வங்கி, காசோலையை பெறுநர், தரகர்

**பின்வரும் விடய ஆய்வில் இருந்து 10, 11 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

**சுதாகர் தனது சொந்த மோட்டார் வாகனமொன்றை அவரது வணிக நடவடிக்கை ஒன்றிற்காக பயணிக்கும் போது அவரது வாகனம் விபத்துக்கு உட்பட்டது. சுதாகர்**



kalvi.lk

**அவரது தனிப்பட்ட கையடக்கத் தொலைபேசி மூலம் அவ்வாகனம் காப்புறுதி செய்யப்பட்ட இலங்கை காப்புறுதிக் கம்பனிக்கு இது தொடர்பாக அறிவித்தார்.**

10) சுதாகர் இலங்கை காப்புறுதி கம்பனியிடம் நட்ட ஈட்டு கோரிக்கை விடுவதற்கு பொருத்தமான காப்புறுதி தத்துவம்

1. காப்புறுதி செய்யத்தக்க உரிமை
2. இழப்பீட்டுத் தத்துவம்
3. உச்ச நம்பிக்கைததத்துவம்
4. மூன்றாம் நபர் காப்புறுதி

11) சுதாகர் காப்புறுதிக் கம்பனியுடன் தொடர்புகொண்ட தொடர்பாடல் ஊடகத்தையும், தொடர்பாடல் முறையையும் ஒழுங்குமுறையாக காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

1. இலத்திரனியல், கையடக்கத் தொலைபேசி
2. கையடக்கத் தொலைபேசி, வாய்மொழி
3. கையடக்கத் தொலைபேசி, எழுத்து
4. தொலைபேசி உரையாடல், இலத்திரனியல்

12) போக்குவரத்து முறையொன்றினை தெரிவுசெய்யும் போது கருத்தில்கொள்ள வேண்டிய விடயங்கள்.

1. பொருளின் தன்மை, கிரயம், விரைவு, பாதுகாப்பு
2. இயலளவு, கிடைப்பனவு, வீதி, கப்பல்
3. கிரயம், துறைமுகம், எரிபொருள்,மார்க்கம்
4. பாதை, ஊடகம்,சக்தி, தரிப்பிடம்

13) பின்வரும் வணிகங்களுள் சில்லறை வியாபார வகையொன்றாக இருப்பது

1. பாடசாலை சிற்றுண்டிச்சாலையில் மாணவருக்கு விற்கப்படும் அப்பியாசக்கொப்பி
2. மலர் புத்தகசாலை பாடசாலை சிற்றுண்டிச்சாலைக்கு அப்பியாசக் கொப்பிகள் விற்பனை.
3. வெதுப்பக உரிமையாளரால் பாடசாலை சிற்றுண்டிச்சாலைக்கு வெதுப்பக உற்பத்திகளை விற்பனை செய்தல்.
4. விவசாயி ஒருவரால் பொருளாதார மத்திய நிலையத்துக்கு காய்கறிகளை வழங்குதல்.

14) இலங்கையைச் சேர்ந்த ஆடைத் தொழிற்சாலை உரிமையாளர் ஒருவர் அமெரிக்காவில் உள்ள ஆடை வியாபாரிற்கு 2000 தைத்த ஆடைகளை விற்பனை செய்கின்றார். இந் நடிவடிக்கை.

1. இறக்குமதி வியாபாரம்
2. சில்லறை வியாபாரம்
3. சேவை ஏற்றுமதி வியாபாரம்
4. பொருள் ஏற்றுமதி வியாபாரம்

15) இறுதி நுகர்வோருடன் தொடர்புபட்டிருக்கும் நபர் பின்வருவோரில் யார்?

1. மொத்த வியாபாரி
2. சில்லறை வியாபாரி
3. தேயிலை ஏற்றுமதியாளர்
4. வாகன இறக்குமதியாளர்



kalvi.lk

16) வணிகமொன்றின் நோக்கத்தினை தீர்மானிக்கின்ற மற்றும் இந்நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான நடவடிக்கைகளை தீர்மானிக்கின்ற ஒரு செயன்முறை அழைக்கப்படுவது.

1. கட்டுப்படுத்தல் 2. நெறிப்படுத்தல்
3. திட்டமிடல் 4. முன்னெடுத்தல்

17) கணக்கீட்டின் பிரதான நோக்கமாக கொள்ளப்படுவது

1. கணக்கீட்டு சமன்பாட்டை தயாரித்தல்
2. இரட்டைப் பதிவுகளை மேற்கொள்ளல்
3. முதன்மை ஏடுகளை தயாரித்தல்
4. வணிகத்தில் அக்கறை செலுத்தும் பல்வேறு பிரிவினருக்குத் தேவையான பல்வேறு தகவல்களை வழங்குதல்.

18) வணிகமொன்றில் கடந்த காலங்களில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகளின் விளைவாக உருவாகிய வளங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?

1. பொறுப்புக்கள் 2. மூலதனம்
3. சொத்துக்கள் 4. வருமானங்கள்

**பின்வரும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு 19, 20 ம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

19) சொத்திலும் உரிமையிலும் குறைவினை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்களைக் குறிக்கும் ஆங்கில எழுத்து

1. A 2. C 3. D 4. B

20) ஆங்கில எழுத்து A குறிக்கும் கொடுக்கல் வாங்கல்களின் இரட்டை விளைவு

1. சொத்து குறையும், சொத்து அதிகரிக்கும்
2. சொத்து குறையும், பொறுப்பு அதிகரிக்கும்
3. சொத்து அதிகரிக்கும், உரிமை அதிகரிக்கும்
4. பொறுப்பு குறையும், சொத்து குறையும்

21) கீழே X நிரலில் கணக்கு வகைகளும்,Y நிரலில் அக்கணக்குகளில் பதியப்படும் உருப்படிகளும் தரப்பட்டுள்ளது.

| X | Y |
|---|---|
| 1. சொத்துக்கணக்கு | A– வங்கிக்கடன் |
| 2. பொறுப்புக்கணக்கு | B - மூலதனம் |
| 3. உரிமைக் கணக்கு | C– விற்பனை |
| 4. வருமானக் கணக்கு | D– மின்சாரம் |
| 5. செலவீனக் கணக்கு | E– கட்டிடம் |

X நிரலின் கணக்கு வகைகளை Y நிரலின் உருப்படிகளுடன் ஒழுங்குமுறையாகப் பொருத்தும் போது கிடைக்கும் விடை

1. A B C D E 2. B C A D E
3. C E A B D 4. E A B C D


kalvi.lk

22) வணிகமொன்றின் வங்கிக் கணக்கின் செலவு மீதியானது

1. சொத்து 2. பொறுப்பு 3. வருமானம் 4. செலவீனம்

23) கடன் கொடுத்தோர் ஒருவருக்கு ரூபா 6000 காசோலை வழங்கப்பட்டது. அச் சந்தர்ப்பத்தில் அதைக் கணக்கேடுகளில் பதிவு செய்யும் போது மூல ஆவணம் (1) ஆக இருப்பதுடன் முதன்மை ஏடு (2) ஆகும். மேற்குறிப்பிட்ட (1), (2) ஆகியவற்றுக்கு பொருத்தமான விடையினை ஒழுங்குமுறையில் காட்டுவது.

1. கொடுப்பனவு கச்சாத்து, வங்கிக் கணக்கு
2. பற்றுச்சீட்டு, காசோடு
3. காசோலை வைப்பு சீட்டு, வங்கிக் கணக்கு
4. காசுக்கணக்கு, கொடுப்பனவுக் கச்சாத்து

24) வணிகமொன்றில் கடன் கொடுத்தோர் ஒருவருக்கு ரூ 15000 செலுத்த வேண்டியுள்ளது. அவருக்குஅத்தொகையைச் செலுத்தும் போது 5% காசுக் கழிவுக்கு உரித்துடையதாக இருந்தது. கழிவு நீக்கிய பின் அவருக்கு செலுத்த வேண்டிய தொகை.

1. 15000 2. ரூ.750 3. ரூ.15750 4. ரூ.14250

25) வாணி வணிகத்தில் சில்லறைக்காசு வசக்கட்டுத் தொகை ரூ.2500 ஆகும். இக் காசினைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட காசுக் கொடுப்பனவுகள் பின்வருமாறு. எழுது கருவி ரூ.500, உபசரணை ரூ.400 பிரயாணம் ரூ.350,அலங்கரிப்பு செலவு ரூ.325, குறித்த கால முடிவில் சில்லறைக் காசாளரால் கேட்கப்படும் போது பிரதம காசாளரால் மீள வழங்கப்படும் பணத்தொகை எவ்வளவு?

1. ரூபா. 825 2. ரூபா.2500 3. ரூபா.1575 4. ரூபா 925

26) ஆரணி தளபாட விற்பனை வணிகத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் சில

A. காசுக்கு தளபாட விற்பனை - ரூ 10000
B. அல்பா கம்பனிக்கு கடனுக்கு தளபாட விற்பனை ரூ. 15000
C. உடமையாளர் சொந்தத் தேவைக்காக எடுத்த தளபாடம் ரூ.5000
D. காஞ்சனா தளபாடக் கம்பனியிடம் இருந்து தளபாடக் கொள்வனவு ரூ.8000

ஆரணி வணிகத்தின் விற்பனை நாளேட்டில் பதிவு செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்களாக இருப்பது

1. A 2. B 3. C 4. D

27) சுந்தரம் மரக்கறி வாணிபத்தில் உரிமையாளரால் 5மப உருளைக்கிழங்கு சொந்தப் பயன்பாட்டுக்காக எடுத்துள்ளார். இதனைப் பதிவு செய்யும் முதன்மை ஏடு.

1. பொதுநாட்குறிப்பேடு 2. கொள்வனவு நாளேடு
3. சில்லறைக் காசேடு 4. விற்பனை நாளேடு

28) வணிகமொன்றின் பரீட்சை மீதியின் வரவுப் பக்க கூட்டுத்தொகை ரூபா 450 000 ஆக இருப்பதுடன், இதன் செலவுப் பக்க கூட்டுத்தொகை ரூபா 4450000 ஆக இருந்தது. இவ் வேறுபாட்டின் காரணமாக வணிகத்தின் தொங்கல் கணக்கு

1. ரூ 5000 வரவு மீதியொன்று காட்டும்
2. ரூ 5000 செலவு மீதியொன்றைக் காட்டும்

3. ரூ 450 000 வரவு மீதியொன்றைக் காட்டும்

4. ரூ 445 000 செலவு மீதியொன்றைக் காட்டும்

29) சீராக்கிய வங்கிக் கணக்கில் இடம்பெறாத உருப்படி யாது?

1. நிலையான கட்டளை கொடுப்பனவு
2. நேரடி வைப்பு
3. வங்கி அறவீடு
4. தேறாத காசோலை

30) ரூ 50000 க்கான கடன் கொள்வனவு செய்யப்பட்ட கிரயப் பட்டியல் ஒன்று ஏடுகளில் பதிவு எதுவும் செய்யப்படாமல் இருந்தது இது எவ்வகையான வழுவாகும்.

1. விடுபட்ட வழு
2. இரட்டிப்பு வழு
3. கணக்கு மாறிப் பதியும் வழு
4. தொகைகளை கூட்டிக், குறைத்துப் பதியும் வழு

31) சொத்துக்கள் = உரிமை + பொறுப்பு எனும் சமன்பாட்டை வெளிப்படுத்தக்கூடிய நிதிக்கூற்றாக இருப்பது

1. பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கு
2. இலாப நட்டக்கூற்று
3. நிதி நிலைமைக் கூற்று
4. வருமான செலவீனக் கூற்று

32) விற்பனைக் கிரயத்தைக் கணிக்கும் போது கருத்தில் கொள்ளப்படும் உருப்படித் தொகுதி

1. ஆரம்ப இருப்பு, கொள்வனவு, இறுதி இருப்பு, கொள்வனவு செலவுகள்
2. இறுதி இருப்பு, விளம்பர செலவுகள், விற்பனை கழிவுகள்
3. சரக்கிருப்பு, கடன்படுநர், கொள்வனவு, மூலதனம்
4. விற்பனை, கொள்வனவு, ஆரம்ப இருப்பு, தளபாடம்

33) 2015.12.31ம் திகதியில் தயாரிக்கப்பட்ட பரீட்சைமீதியில் பெற்ற வாடகை ரூ12000 எனப் பதிவு செய்யப்பட்டிருந்தது. அன்றைய தினம் தயாரிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் வருமதி வாடகை வருமானமாக ரூ 1200 காட்டப்பட்டிருந்தது. வருடாந்த வாடகை வருமானம் எவ்வளவு

1. ரூ 1200  2. ரூ 13200  3. ரூ 12000  4. ரூ 10200

34) Aநிரலிற்கு பொருமானதை B நிரலில் இருந்து தெரிவுசெய்க.

| A | B |
|---|---|
| 1. விநியோக செலவு | அ) வங்கிக்கடன் வட்டி |
| 2. நிர்வாக செலவு | ஆ) அறவிட முடியாக் கடன் |
| 3. நிதி செலவும் ஏனைய செலவும் | இ) கட்டட வாடகை |

1. 1 – அ, 2 – ஆ, 3 - இ
2. 1 – ஆ, 2 - இ, 3 - அ
3. 1 - இ, 2, அ 3 - ஆ
4. 1 – அ, 2 - இ, 3 - ஆ

35) மோட்டார் வான் ஒன்றின் கிரயம் 32000 அதன் எஞ்சிய பெறுமானம் 2000, அதன் பயன்படு ஆயுட்காலம் 6 வருடங்கள் நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டால் வருடாந்த தேய்வு

1. 5000  2. ரூ 2000  3. ரூ 300000  4. ரூ 32000



kalvi.lk

பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 36 – 40 வரையிலானன வினாக்களுக்கு விடையளிக்குக.

31.12.2015 உள்ளவாறான பரீட்சை மீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| மூலதனம் | | 600000 |
| ஆரம்ப இருப்பு | 5000 | |
| கொள்வனவு/ விற்பனை | 80000 | 200000 |
| 10%வங்கிக் கடன் | | 20000 |
| விநியோகவான் கிரயத்தில் | 200000 | |
| கட்டிடம் கிரயத்தில் | 500000 | |
| காப்புறுதி | 3000 | |
| 01.01.2015 பெறுமான தேய்வு ஏற்பாடு | | |
| – விநியோக வான் | | 30000 |
| பெற்ற தரகு | | 5000 |
| விற்பனை ஊழியர் சம்பளம் | 12000 | |
| வங்கி வட்டி | 2000 | |
| வங்கிக் கடன் வட்டி | 15000 | 10000 |
| அறவிட முடியாக் கடன் | 1000 | |
| வங்கி மேலதிகப் பற்று | | 16000 |
| சம்பளம் | 15000 | |
| காசு மீதி | 50000 | |
| | 881000 | 881000 |

**மேலதிக தகவல் வருமாறு**

1. 2015.12.31 இல் எஞ்சிய இருப்பு ரூ.2000
2. உடமையாளர் தனது தனிப்பட்ட சொந்தத் தேவை கருதி பற்றிய ரூ 3000 கிரயம் கொண்ட இருப்புக்கள் தொடர்பாக எவ்வித பதிவும் இடம்பெறவில்லை.
3. விநியோக வானுக்கு நேர்கோட்டு முறையில் 10% பெறுமானத்தேய்வு இடப்படும்.

36) இவ்வணிகத்தின் 2015.12.31 திகதியில் முடிவடைந்த வருமானக் கூற்றில் காட்டப்பட வேண்டிய விநியோக செலவுக் கூட்டுத்தொகை

1. ரூ 35000 2. ரூ 33000 3. ரூ 50000 4. ரூ 55000

37) இவ்வணிகத்தின் நடைமுறைச் சொத்துக்களை மட்டும் உள்ளடக்கிய விடையாக இருப்பது.

1. கடன் கொடுநர், காசு மீதி,கட்டிடம்
2. கடன்படுநர், வங்கி மேலதிக பற்று, காசு
3. இறுதி சரக்கிருப்பு, கடன்படுநர், காசு மீதி,
4. இறுதி சரக்கிருப்பு, விநியோக வான், காசு மீதி

38) இவ்வணிகத்தின் 2015.12.31 ந் திகதியில் முடிவடைந்த வருடத்துக்கான மொத்த இலாபம்

1. ரூ 120,000 2. ரூ. 100, 000 3. ரூ.90000 4. ரூ.60000



kalvi.lk

39) இவ் வணிகத்தின் 2015.12.31ந் திகதியில் முடிவடைந்த வருடத்துக்கான தேறிய இலாபம்

1. ரூ.70000 2. ரூ.71000 3. ரூ 73000 4. ரூ.72000

40) இவ்வணிகத்தின் 2015.12.31ந் திகதியில் உள்ளவாறான உரிமையின் பெறுமானமாக இருப்பது

1. 66900 2. ரூ.600 000 3. ரூ. 669 000 4. 69000

**(1 x 4 = 40புள்ளிகள்)**

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

பகுதி 11

- **முதலாம் வினாஉட்பட, பகுதி I இலிருந்து இரண்டுவினாக்களையும் பகுதி II ல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடைஎழுதுக.**

**1)** விவசாயதிணைக்களத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் பதவியில் இருந்துஓய்வு பெற்றசுந்தரம் என்பவர் அவர் ஓய்வுபெறுகையில் அவருக்கு கிடைத்த திரட்டிய ஓய்வூதியமான ரூபா 500000ஐ பயன்படுத்தி 2016.ஜன.01 இல் விவசாயப் பண்ணை ஒன்றினை ஆரம்பித்து இருந்தார். இம் முயற்சிக்கு அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று தொழிநுட்ப ஆலோசனைகளை வழங்கி இருந்தது. பண்ணையானது சுந்தரத்திற்கு சொந்தமான ரூபா 300000 பெறுமதியான காணியில் நிறுவப்பட்டிருந்தது.

ஜன – 01 - ரூபா 80000 செலவில் கட்டிடஅமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு ஜன –10 இல் பணிகள் பூர்த்தியடைந்தது.

ஜன – 11 - பண்ணைத் தேவைகளுக்குஎனரூபா 100000 வங்கியின் நடைமுறைக் கணக்கில் வைப்பிலிடப்பட்டது.

ஜன – 15 - ரூபா 15000 பெறுமதியானவிதைகள் கொள்வனவுசெய்யப்பட்டது. இதற்கானகொடுப்பனவுகாசோலை மூலம் மேற்கொள்ளப்பட்டது.

ஜன – 16 - நீர்ப்பாசனத் தேவைகளுக்காகரூபா 40000 பெறுமதியானநீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றுகொள்வனவுசெய்யப்பட்டது. இதற்கானகொடுப்பனவுகாசோலை மூலம் மேற்கொள்ளப்பட்டது.

ஜன – 20 - கிருமிநாசினிகள் கொள்வனவுரூபா 12000

ஜன – 31 - செலுத்திய கூலிரூபா 12000

பெப்ரவரி 1- நாற்றுச்சாடிகள் கொள்வனவுரூபா 2000 (பொலீத்தினால் ஆனவை)

பெப்ரவரி 15- நாற்றுக்கள் விற்பனைரூபா 40000

பெப்ரவரி 29- 29 செலுத்திய கூலிரூபா 7000

1. சுந்தரம் மேற்படி அமைப்பை ஆரம்பிக்க எண்ணியமைக்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் இரண்டு தருக.
2. மேற்படி வணிகஅமைப்பானது
   அ. நோக்க அடிப்படையில் எவ்வகையைச் சாரும்
   ஆ. உரிமை அடிப்படையில் எவ்வகையைச் சாரும்.
3. காசோலை மூலமானகொடுக்கல் வாங்கல்களின் மூலம் சுந்தரத்திற்குக் கிடைக்கும் அனுகூலங்கள் இரண்டுதருக.
4. நாற்றுக்களின் விற்பனையைஅதிகரிக்கஅவர் மேற்கொள்ளவேண்டியமேம்படுத்தல் நடவடிக்கைகள் இரண்டுதருக.



kalvi.lk

5. மேற்படிபண்ணைஅமைப்பின் ஆரம்ப மூலதனம் எவ்வளவு?
6. மேற்படிபண்ணைஅமைப்பின் நடைமுறையல்லாச் சொத்துக்களையும் பெறுமதிகளையும் குறிப்பிடுக.
7. இவ் வணிகத்தின் வங்கிக் கணக்கைத் தயாரித்து 2016-01.31 ஆம் திகதிக்குஅதைச் சமப்படுத்திக் காட்டுக.
8. பெப்ரவரிமாதமுடிவில் நிறுவனத்தின் காசுமீதியாது?
9. சொத்துக்கள் = மூலதனம் + பொறுப்புக்கள் எனும் சமன்பாட்டில் ஜனவரி 15, ஜனவரி 31 திகதியகொடுக்கல் வாங்கல்கள் ஏற்படுத்தும் தாக்கத்தினைக் குறிப்பிடுக.
10. 2016 –பெப்,29 இல் முடிவடைந்த இரண்டுமாதகாலப்பகுதியில் நிறுவனம் உழைத்த தேறிய இலாபம் யாது?
(பெறுமானத்தேய்வைகருத்திற் கொள்ளத் தேவையில்லை)

**பகுதி I வணிகக்கல்வி**

**2)**

1. அ. வணிகம் என்றால் என்ன?
ஆ. நவீனதொழில்நுட்பத்தின் மூலம் வியாபாரத்தின் எச் செயற்பாடுகளை இலகுவாகநிறைவேற்றிக் கொள்ளமுடியும்?

2. பின்வரும் கூற்றுக்கள் சரியானதா பிழையானதா என்பதைக் குறிப்பிடுக.
அ. வணிகத்தின் மீதுஅக்கறை செலுத்தும் பிரதானநபர் உரிமையாளர்
ஆ. பொருத்தமான இடத்தில் வணிகம் அமைந்துகாணப்படுவதுவாய்ப்பாகும்.
இ. உற்பத்திக் கருமங்களுக்காகப் பயன்படுகின்ற இயந்திர உபகரணங்கள், உற்பத்திக் காரணியொன்றாகிய மூலதனத்திற்கு உரித்தாகும்.
ஈ. தாதியர் பயிற்சிக் கல்லூரி சேவைஉற்பத்தி வணிகமொன்றாகும்.

3. பசுப்பால் பண்ணை ஒன்றை நடாத்திச் செல்லும் ஆரு இயற்கைப் பசளையினை உற்பத்தி செய்வதற்கு எண்ணுகின்றார். அத்துடன் இக்காலப் பகுதியில் இரசாயனப் பசளையின் பாவனையை இயாலுமானவரைகுறைத்துக் கொள்வதில் அரசானது கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது.
ஆரு இயற்கைப் பசளைஉற்பத்தி வணிகத்தின்
அ. வாய்ப்பொன்றையும்
ஆ. பலமொன்றையும் தருக.

**3)**

1. அ. காசோலையின் குறுக்குக் கோட்டின் வகைகள் எவை?
ஆ. காசோலையொன்றுடன் தொடர்புடைய பிரிவினர்கள் யாவர்?

2. பின்வரும் கூற்றுக்கள் சரியானதா பிழையானதா என்பதைக் குறிப்பிடுக.
அ. தனியாள் உரிமைவணிகத்தின் சிறப்புப்பண்பாக வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் கூடியதாகப் பதிவுசெய்தல் ஆகும்.
ஆ. வணிகமொன்று ஊழியர்களுக்கிடையே தொடர்பாடலை பரிமாற்றம் செய்தல் அகத்தொடர்பாடல் ஆகும்.


kalvi.lk

இ. வழி, சாதனம், சக்தி, தரிப்பிடம் போக்குவரத்தின் அடிப்படைகளாகும்.

ஈ. காப்புறுதியில் பாதுகாப்பினைப் பெறும் பிரிவினர் காப்புறுதிசெய்பவர் எனவும் காப்புறுதிப் பாதுகாப்பினைபெற்றுக் கொடுக்கும் பிரிவினர் காப்புறுத்துவோன் எனவும் அழைக்கப்படுவர்.

3. இலாபம் உழைக்கும் நோக்கில்லாத விசேடமாக அங்கத்தவர்களுக்கும் சமூகத்திற்கும் நன்மைசெய்யும் நோக்கில் அங்கத்தவர்களினால் ஆரம்பிக்கப்படும் அமைப்பு சங்கஅமைப்பு.

அ. மேலேகுறிப்பிட்ட அமைப்புக்களின் பண்புகள் இரண்டுதருக.

ஆ. மேலேகுறிப்பிட்ட அமைப்புக்களுக்கு இரு உதாரணம் தருக.

4. மலைநாட்டுமரக்கறிகளை இலங்கையின் பல்வேறுபகுதிகளுக்கும் வழங்கும் ''மலையகமண் உற்பத்திகள்''நிறுவனம் சிறப்பான பணியை தொடர்ச்சியாக மேற்கொண்டுவருகின்றது.

அ. ''மலையகமண் உற்பத்திகள்''நிறுவனம் பின்பற்றும் போக்குவரத்துமுறை எது?

ஆ. மேலேகுறிப்பிட்டபோக்குவரத்தின் இரு நன்மைகளையும் இரு தீமைகளையும் தருக.

**4)**

1. அ. முகாமைத்துவம் என்பதால் கருதுவதுயாது?

ஆ. கட்டுப்படுத்தலின் படிமுறைகள் எவை?

2. பின்வரும் கூற்றுக்கள் சரியானதா பிழையானதா என்பதைக் குறிப்பிடுக.

அ. குறித்தகாலப்பகுதியில் குறைந்தசெலவுடன் நோக்கத்தைநிறைவேற்றுதல் விளைதிறன் எனப்படும்.

ஆ. குறுக்குக் கோடுகளுக்கு இடையில் கொடுணிகணக்குஎனக் குறிப்பிட்டால் பெறுபவர் கணக்கில் மட்டுமேவைப்புச் செய்யமுடியும்.

இ. சந்தைப்படுத்தல் எண்ணக் கருக்கள் மனிததேவைகள் விருப்பங்களைதிருப்தி செய்வதைமையமாகக் கொண்டது

ஈ. கொள்வனவாளரும்விற்பனையாளரும் சந்திக்கும் குறிப்பிட்ட இடம் சந்தை ஆகும்.

3. முகாமைத்துவச் செயன்முறையை பாய்ச்சல் கோட்டுப் படத்தில் காட்டுக?

4. அ. சந்தைப்படுத்தல் என்பதால் கருதுவதுயாது?

ஆ. சந்தைப்படுத்தல் செயற்பாடுகளைபட்டியல்படுத்துக.

## பகுதி II – கணக்கீடு

**5)**

1. அ. சொத்துக்கள் என்பதனைவரைவிலக்கணப்படுத்துக.

ஆ. உரிமைக் கணக்குகள் இரண்டுதருக.

(02 புள்ளிகள்)



kalvi.lk

2. தாமரை வணிகத்தின் 2016 ஜனவரிமுதல் வாரத்தினுள் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

a. 2016.01.01 இல் மூலதனமாக இட்டகாசு ரூபா 50000
b. 2016.01.03 இல் காசுக்குபொருட்கள் கொள்வனவு ரூபா 20000
c. 2016.01.05 இல் ரூபா 10000 பெறுமதியானபண்டங்கள் ரூபா 12000 ற்குகடனுக்குவிற்பனவுசெய்யப்பட்டது.
d. 2016.01.06 இல் உரிமையாளரின் சொந்தஆயுட்காப்புறுதிக் கட்டணம் ரூபா 4000 செலுத்தப்பட்டது.
e. 2016.01.07 தொடர்ந்துவரும் வாரத்தில் சம்பளம் செலுத்துவதற்காக வங்கியிலிருந்து பெற்றகடன் ரூபா 20000

பின்வரும் மாதிரியைப் பயன்படுத்திமேற்படிகொடுக்கல் வாங்கல்கள் சமன்பாட்டில் ஏற்படுத்துகின்றதாக்கத்தினைபெறுமதிகளுடன் குறிப்பிடுக.

| கொடுக்கல் வாங்கல் - இல | சொத்து = | உரிமை + | பொறுப்பு |
|---|---|---|---|
| உ.ம் (1) | +50000 | +50000 | _ |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |

Education கல்வி அதியாபன

3. எழுதுகருவிகளை கொள்வனவு செய்து மீள்விற்பனை செய்யும் "ஆருத்ரா" வணிகத்தின் 2016 மார்ச் மாதத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு,

2016.03.02 – பட்டியல் இல 17இன்படி நிமலாவிற்கு விற்பனை செய்யப்பட்ட பண்டங்களின் தேறிய பெறுமதி ரூ 12000.
2016.03.12 - பட்டியல் இல 18இன்படி நித்தியாவிற்கு விற்பனை செய்யப்பட்ட பண்டங்களின் தேறிய பெறுமதி ரூ 14500.
2016.03.20 - பட்டியல் இல 116இன்படி கமலிடம் கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்களின் தேறிய பெறுமதி ரூ 21000.

வேண்டப்படுவது :-

a. மார்ச் மாதத்திற்கான விற்பனை நாட்குறிப்பினை தயாரிக்குக.
b. உரிய பேரேட்டுக் கணக்கினை தயார் செய்க.

4. பூந்தளிர் வணிகத்தின் 2016 ஏப்ரல் மாத்தில் இடம்பெற்ற சில்லறைச் செலவுகள் தொடர்பான தகவல்கள் வருமாறு,



kalvi.lk

| திகதி | விபரம் | தொகை(ரூபாவில்) |
|---|---|---|
| *2016.04.01* | கிடைத்த வசக்கட்டு நிதி | *3000* |
| *2016.04.05* | போக்குவரத்துச் செலவு | *125* |
| *2016.04.07* | எழுதுகருவிச் செலவு | *130* |
| *2016.04.12* | காகிதாதிகள் | *140* |
| *2016.04.15* | உபரிப்புச் செலவு | *180* |
| *2016.04.18* | போக்குவரத்துச் செலவு | *120* |
| *2016.04.20* | தேனீர்ச் செலவு | *130* |
| *2016.04.23* | கடதாசி துளையிடும் செலவு | *170* |
| *2016.04.28* | கடன்கொடுத்தோருக்கான சுந்தருக்கு கொடுத்தது | *150* |
| *2016.04.29* | சுத்திகரிப்புச் செலவு | *60* |
| *2016.04.30* | சிறுசெலவுக் கட்டுநிதி மீள்நிரப்பப்பட்டது | |

வேண்டப்படுவது போக்குவரத்துச் செலவு, எழுதுகருவிச் செலவு, உபசரிப்புச் செலவு, நானாவித செலவு போன்ற பகுப்பாய்வு நிரல்களைப் பயன்படுத்தி 2016 ஏப்ரல் மாதத்திற்கான சில்லறைக் காசேட்டை தயார் செய்க.

**6)**

1. ஓர் வணிகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை பொதுக்குறிப்பேட்டில் தருக.
   அ. வருடாந்தக் காப்புறுதிக் கட்டணம் ரூ 8000 இல் ரூ 6000 மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது.
   ஆ. வாடகைவருமானம் ரூ15000 கிடைத்திருப்பதுடன் மேலும் ரூ 5000 வரவேண்டியுள்ளது
   இ. மோட்டார் வாகனம் ரூ 300000 வருடாந்தப் பெறுமானத்தேய்வு10%
   பொதுக்குறிப்பேட்டில் தருக. (4 புள்ளிகள்)

2. யூன் 30 ல் அனந்து வணிகத்தின் வங்கிகணக்கின் மீதி ரூ 48000 ஆகும் எனினும் அத்திகதியில் வங்கிக்கூற்றில் காணப்பட்ட மீதி வேறுபட்டிருந்தது.
   அ. கடன்பட்டவரானகமல் நேரடியாகவைப்புச் செய்ததொகை ரூ 12000 ஆகும்.
   ஆ. வங்கியில் வைப்புச் செய்தும் தேறாதகாசோலைகள் ரூ 9000.
   இ. வழங்கப்பட்டு இதுவரைமாற்றப்படாதகாசோலை ரூ 6000 ஆகும்.
   ஈ. வங்கிஅறவிட்டவங்கிக் கட்டணம் ரூ 1000 காசேட்டில் பதியப்படவில்லை.
      1. வங்கிக் கணக்கு மீதியை சீராக்குதல்
      2. 30.06.2016 இல் வங்கி இணக்கக்கூற்றினைத் தயாரித்து வங்கிக்கூற்று மீதியினைக் காண்க. **(4 புள்ளிகள்)**

3. மலரவன் வணிகம் 2016.06.30ம் திகதி தயாரித்த பரீட்சைமீதியின் மொத்தம் இணங்கவில்லை. வேறுபாடாகிய ரூ 7200 தொங்கல் கணக்கு



kalvi.lk

வரவுவைக்கப்பட்டது. பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போது பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அ. ரூ 10000 பெறுமதியான விற்பனைப்பட்டியல் ஏடுகளில் இருமுறை பதியப்பட்டது.

ஆ. மின்சாரக் கட்டணம் ரூ 8000 மின்சாரக் கணக்கில் ரூ 800 எனப் பதியப்பட்டது.

இ. காப்புறுதிக் கட்டணம் ரூ 2000 ஏடுகளில் பதியப்படவில்லை.

1. திருத்துவதற்கானபொதுநாட்குறிப்பு
2. தொங்கல் கணக்கு

**7)**

1. அ. வணிகமொன்றில் காணப்படக் கூடியநடைமுறைச் சொத்து இரண்டுதருக. *(01 புள்ளி)*

   ஆ. காசுக் கணக்கிற்கும் இலாபநட்டக் கூற்றுக்கும் இடையில் காணப்படும் வேறுபடுகள் எவை? *(01 புள்ளி)*

2. பின்வரும் நிகழ்வுகளுக்கான இரட்டைவிளைவினைத் தருக.

   அ. காசாக மூலதனம் ஈடுபடுத்தல் ரூ 25000.

   ஆ. கடனுக்குப் பொருட்களைக் கொள்வனவு ரூ 12000.

   இ. ஊழியருக்கு சம்பளம் ரூ 5000 வழங்குதல்.

   ஈ. வாடகை வருமானம் ரூ 4000 பெறுதல். *(02 புள்ளி)*

3. *31.12.2015 இல் சலாம் நிறுவனத்தின் பரீட்சைமீதி*

| | | |
|---|---|---|
| கொள்வனவு | *500000* | |
| விற்பனை | | *640000* |
| கட்டடம் கிரயத்தில் | *300000* | |
| உபகரணம் கிரயத்தில் | *50000* | |
| கட்டிடதேய்மானஏற்பாடு | | *30000* |
| ஆரம்பசரக்கிருப்பு | *12000* | |
| கொடுத்தகழிவு | *1000* | |
| பெற்றகழிவு | | *5500* |
| காப்புறுதி | *5500* | |
| விளம்பரம் | *25000* | |
| 10%வங்கிக் கடன் | | *50000* |
| வங்கிக்கடன் வட்டி | *5000* | |
| கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் | *20500* | *23000* |
| காசு | *29500* | |
| மூலதனம் | | *200000* |
| | ***948500*** | ***948500*** |



kalvi.lk

மேலதிகததகவல்கள் வருமாறு

1. *31.12.2015* இறுதி இருப்பு ரூ 15000.
2. கடன்பட்டோரில் ரூ 2500வை அறவிடமுடியாத கடனாப் பதிவளித்தல் வேண்டும்.
3. கட்டடங்கள் உபகரணங்கள் என்பவற்றுக்குவருடாந்தம் 10%பெறுமானத் தேய்வுசெய்யப்படல் வேண்டும்.

   அ. *31.12.2015* ஆம் திகதிமுடிவடைந்தவருடத்துக்கான இலாபநட்டக் கூற்று

   ஆ. *31.12.2015* இல் உள்ளவாறானநிதிநிலமைக்கூற்று

Education கல்வி අධ්‍යාපන

Follow and Get papers Daily ..!

Education கல்வி அධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page